# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
******

**ஆணை எண்:195/பேரூ/2025**
**நாள் : 03.11.2025**

திரு. M. முகமது ரஹீஸ்,
மதுக்கூர்,
தஞ்சாவூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர், இடையகாடு, 1/7, பெரியார் நகர் என்ற முகவரியை சேர்ந்த திரு. M. முகமது ரஹீஸ் என்பவரது 15.04.2025 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 29.05.2025 அன்று பெறப்பட்டு, 195/பேரூ/2025 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர், இடையகாடு, 1/7, பெரியார் நகர் என்ற முகவரியை சேர்ந்த திரு. M. முகமது ரஹீஸ் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 15.04.2025 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் பேரூராட்சி மௌலானா அறக்கட்டளைக்கு சொந்தமான 10-வது வார்டிற்கு உட்பட்ட மெயின் ரோடு மௌலானா தோப்பு பகுதியில் வியாபாரம் செய்வதற்காக வாடகை ஒப்பந்தம் செய்யப்பட்ட ராஜதுரை என்பவர், மதுக்கூர் பேரூராட்சி அலுவலக அதிகாரிகள் துணையோடு மௌலானா அறக்கட்டளைக்கு சொந்தமான இடத்துடைய பழைய சொத்து வரியை பேரூராட்சி செயல் அலுவலர் துணையோடு இராஜதுரை பெயருக்கு அரசு வழிகாட்டியுள்ளவாறு எந்த ஒரு ஆவணமும் (பட்டா, பத்திரம்) இல்லாமல் குறுக்கு வழியில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறது.

அதிகாரிகள் அறக்கட்டளையின் இடத்திற்கு பெயர் மாற்றம் செய்தது தவறு. முறையே மாற்றப்பட்ட சொத்து வரி விதிப்பு எண்கள் 2455, 2456, 2481, 2480 ஆகும். எனவே மேற்கண்ட

எனது குற்றச்சாட்டினை தீர விசாரித்து பெயர் மாற்றம் செய்திட இடத்தினை கள ஆய்வு செய்த இளநிலை உதவியாளர் முருகானந்தம் மற்றும் அனுமதி வழங்கிய செயல் அலுவலர் இருவர் மீதும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் மதுக்கூர் பேரூராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் முறையற்ற கட்டிட அனுமதி, முறையான ஆவணங்கள் இன்றி சொத்து வரி மற்றும் குடிநீர் இணைப்பு வழங்குதல் போன்ற பல்வேறு முறைகேடுகள் நடந்துள்ளன. இதனை கள ஆய்வு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

நான் கூறியுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் உண்மை என்று உறுதி கூறி எனது புகார்களுக்கான ஆதாரங்களான சொத்து வரி இரசீது இணைத்துள்ளேன். கூடுதலாக சையது முஸ்தபா மௌலானா என்ற அறக்கட்டளை நிர்வாகி பெயரில் உள்ள சொத்து வரி விதிப்பு எண். 2468க்கான இரசீது இணைத்துள்ளேன்." என்று தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 17.06.2025 நாளிட்ட அறிவிப்பு மூலம் மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை கேட்டுக் கொள்ளப்பட்டது.

3. மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ஆர். முத்துக்கண்ணு என்பவர் தனது 04.07.2025 நாளிட்ட அறிக்கை ந.க.எண்.281/2025/அ1–ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்:

"தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் பேரூராட்சி வார்டு எண். 10, மௌலானாதோப்பு சொத்துவரி விதிப்பு எண்கள் 2455, 2456, 2480, 2481 (கதவு எண்கள். 134/11, 134/11ஏ, 12/134/பி மற்றும் 14/137) தற்போது திரு. த. ராஜதுரை என்பவர் பெயரில் சொத்துவரி விதிப்பு உள்ளது. மேற்படி இடமானது மௌலானா அறக்கட்டளைக்கு சொந்தமானது என்றும் அதனை முறைகேடாக திரு. த. ராஜதுரை என்பவரின் பெயரில் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக திரு. M. முகமது ரஹீஸ் என்பவரால் புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மதுக்கூர் பேரூராட்சி அலுவலக சொத்து வரி கேட்பு பதிவேடு ஆய்வு செய்யப்பட்டது. அதில் தற்போது மேற்படி வரிவிதிப்புகள் திரு. த. ராஜதுரை என்பவர் பெயரில் உள்ளது. மேலும் இது குறித்து ஆவணங்கள் மற்றும் விபரங்களை வழங்க கோரி திரு. த. ராஜதுரை மற்றும் மௌலானா அறக்கட்டளையின் நிர்வாகி ஆகியோருக்கு பேரூராட்சி அலுவலக அறிவிப்பு (ந.க. எண். 281/2025/அ1 நாள் 30.06.2025) அனுப்பப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டதில், மேற்படி வரிவிதிப்புகளை தனது பெயரில் மாற்றம் செய்துகொள்ள மௌலானா அறக்கட்டளை மூலம் நீண்டகால அனுபோக ஒத்திபத்திரம் எழுதிகொடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து திரு. த. ராஜதுரை என்பவரால் அதன் நகல் பேரூராட்சி அலுவலகத்தில் வழங்கப்பட்டுள்ளது. மேலும் மௌலானா அறக்கட்டளை நிர்வாகத்தினரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் நாங்கள் திரு. த. ராஜதுரை என்பவருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்துகொள்ள ஒப்புதல் தெரிவித்து பத்திரமாக எழுதிகொடுக்கப்பட்டுள்ளது உண்மை என தெரிவிக்கப்பட்டது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் இது குறித்து மாண்பமை தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்றத்தினால் தெரிவிக்கப்படும் அறிவுரைகளை பின்பற்றி அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் திரு. M. முகமது ரஹீஸ் மற்றும் எதிர்மனுதாரரான மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோர்களை 31.07.2025 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 15.07.2025 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரரான திரு. M. முகமது ரஹீஸ் என்பவர் 31.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை அளித்துள்ளார். அதில் –

- "தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10-ல் மௌலானா அறக்கட்டளைக்கு சொந்தமான மௌலானா தோப்பு பகுதியில் வியாபாரம் செய்வதற்காக அறக்கட்டளையால் திரு. இராஜதுரை என்பவருக்கு வாடகை விடப்பட்டதில் பேரூராட்சி அலுவலர்கள் மூலம் முறைகேடாக தனிநபர் இராஜதுரை என்பவரின் பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. வரிவிதிப்பு எண்கள் 2455, 2456, 2480 மற்றும் 2481 ஆகும்.

- மேற்காணும் மௌலானா அறக்கட்டளையின் சொத்துவரியானது 2016ஆம் ஆண்டு வரை அறக்கட்டளையின் நிர்வாகியின் பெயரிலேயே சொத்துவரி இருந்து வந்துள்ளது என பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேற்காணும் புகாரினை குறித்து முறைகேடுகளுக்கு காரணமான சம்பந்தப்பட்ட பேரூராட்சி அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள ஆவன செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்." என தெரிவித்துள்ளார்.

6. எதிர்மனுதாரரான மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் திரு. ஆர். முத்துக்கண்ணு என்பவர் நிர்வாக காரணத்தினால் 31.07.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு வர இயலாத காரணத்தினால், தனது சார்பாக பேரூராட்சி இளநிலை உதவியாளர் திரு. ரெ. முருகானந்தம் என்பவர் விசாரணைக்கு ஆஜராக அனுமதி வழங்கிட வேண்டியிருந்தார்.

7. எதிர்மனுதாரரான மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் கோரிக்கையை இம்முறைமன்றம் ஏற்று, அவர் சார்பாக மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலக இளநிலை உதவியாளர் திரு. ரெ. முருகானந்தம் என்பவர் 31.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலம் அளித்துள்ளார். அதில் –

- தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட வார்டு எண். 10, மௌலானா தோப்பு பகுதியில் உள்ள இடங்களான (சொத்துவரி எண்கள் 2455, 2456, 2480 மற்றும் 2481 மற்றும் கதவு எண்கள் 134/11, 134/11ஏ, 12/134/பி மற்றும் 14/137) ஆகியவற்றில் திரு. த. ராஜதுரை என்பவரின் பெயரில் சொத்துவரி இடம் பெற்றிருப்பது குறித்து திரு. ராஜதுரை மற்றும் மௌலானா அறக்கட்டளையின் பொறுப்பாட்சியர் (Trustee) ஆகியோரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

- விசாரணையின்போது, ராஜதுரை என்பவர் மேற்படி இடத்தினை நீண்டகால அனுபோக செய்துகொள்ளவும் மற்றும் தனது (ராஜதுரை) பெயரில் சொத்துவரி

பெயர் மாற்றம் செய்திடவும் மௌலானா அறக்கட்டளை நிர்வாகியால் 21.03.2018 நாளிட்ட நீண்டகால அனுபோக ஒத்திபத்திரம் (99 வருடங்கள்) எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என மனுதாரர் தெரிவித்து அதன் நகலையும் சமர்ப்பித்தார்.

- மேற்காணும் ஒத்திபத்திரம் மூலம் திரு. த. ராஜதுரை என்பவருக்கு சொத்துவரி பெயர் மாற்றம் செய்துகொள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டது உண்மை என மௌலானா அறக்கட்டளை நிர்வாகத்தினர் விசாரணையின்போது தெரிவித்துள்ளனர் என்பதை இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

8. மனுதாரர் திரு. M. முகமது ரஹீஸ் என்பவரின் புகார்மனு, அவரது வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் இளநிலை உதவியாளர் திரு. ரெ. முருகானந்தம் என்பவரின் வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம், மதுக்கூர் என்ற இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. M. முகமது ரஹீஸ் என்பவர் தனது 15.04.2025 நாளிட்ட முறையீட்டு மனுவில் மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சிக்குட்பட்ட 10-வது வார்டில் அமைந்துள்ள மௌலானா அறக்கட்டளைக்கு சொந்தமான மௌலானா தோப்புப் பகுதியில் வியாபாரம் செய்வதற்காக அறக்கட்டளையில் திரு. ராஜதுரை என்பவருக்கு வாடகைக்கு விடப்பட்டதில் பேரூராட்சி அலுவலக அலுவலர்கள் மூலம் முறைகேடாக தனிநபர் திரு. ராஜதுரை என்பவரின் பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்துள்ளதாக புகார் தெரிவித்துள்ளார். சொத்துவரி விதிப்பு எண்கள் 2455, 2456, 2480 மற்றும் 2481 ஆகும்.

மேற்காணும் புகார் குறித்து, மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர், புகாருக்குள்ளான திரு. ராஜதுரை மற்றும் மௌலானா அறக்கட்டளை நிர்வாகி ஆகியோரிடம் விசாரணை மேற்கொண்டதில், திரு. ராஜதுரை என்பவர் மௌலானா அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்துவரி எண்கள் 2455, 2456, 2480 மற்றும் 2481 உள்ள இடத்தினை நீண்டகால அனுபோக செய்து கொள்ளவும் மற்றும் தனது (ராஜதுரை) பெயரில் சொத்துவரி பெயர் மாற்றம் செய்திடவும் மௌலானா அறக்கட்டளை நிர்வாகியால் 06.06.2016 மற்றும் 21.03.2018 நாளிட்ட நீண்டகால அனுபோக ஒத்திபத்திரம் (99 வருடங்கள்) எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என திரு. ராஜதுரை தெரிவித்து ஒத்திப் பத்திரத்தின் நகலையும் சமர்ப்பித்துள்ளார் எனவும் இதனை மௌலானா அறக்கட்டளை நிர்வாகத்தினரும் ஒப்புக்கொண்டுள்ளதாகவும் பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் இளநிலை உதவியாளரின் வாக்குமூலம் வாயிலாக தெரிவித்திருப்பதன் மூலம் தெரிய வருகிறது.

மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் திரு. ராஜதுரை மற்றும் மௌலானா அறக்கட்டளை நிர்வாகத்தினரால் செய்து கொண்டுள்ள 99 வருடகால ஒத்திப்பத்திரமானது பத்திரப்பதிவு அலுவலகத்தில் முறையாக பதிவு செய்யப்படவில்லை என்பது தெரிய வருகிறது.

பதிவுச் சட்டம் 1908, பிரிவு 17-ன்படி 1 வருட கால மேலுள்ள ஒத்தி பத்திரம் போன்றவை கட்டாயமாக பதிவு செய்யப்பட வேண்டும் என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

## Section 17 in The Registration Act, 1908

17. Documents of which registration is compulsory.

(1) The following documents shall be registered, if the property to which they relate is situate in a district in which and if they have been executed on or after the date on which, Act XVI of 1864, or the Indian Registration Act, 1866, or the Indian Registration Act, 1871, or the Indian Registration Act, 1877, or this Act came or comes into force, namely,

(a) xxxxxxxx
(b) xxxxxxxx
(c) xxxxxxxxx
(d) leases of immovable property from year to year, or for any term exceeding one year, or reserving a yearly rent;

மேலும் இந்திய அறக்கட்டளை சட்டம், 1882 (Indian Trusts Act, 1882) பிரிவு 36-ன் கீழ் நீதிமன்ற அனுமதியின்றி 21 வருட கால குத்தகை விடப்படலாம். 21 வருடத்திற்கு மேல் நீதிமன்ற ஆணை பெறப்படவேண்டும் என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது.

## The Indian Trusts Act, 1882

### Section 36. General authority of trustee

In addition to the powers expressly conferred by this Act and by the instrument of trust, and subject to the restrictions, if any, contained in such instrument, and to the provisions of section 17, a trustee may do all acts which are reasonable and proper for the realization, protection or benefit of the trust-property, and for the protection or support of a beneficiary who is not competent to contract.

Except with the permission of a principal Civil Court of original jurisdiction, no trustee shall lease trust-property for a term exceeding twenty-one years from the date of executing the lease, nor without reserving the best yearly rent that can be reasonably obtained.

மனுதாரர் திரு. M. முகமது ரஹீஸ் புகாராக தெரிவிக்கும் இடத்தினை திரு. ராஜதுரை மற்றும் மௌலானா அறக்கட்டளை நிர்வாகத்தினரால் மேலே தெரிவிக்கப்பட்ட பதிவுச் சட்டம் 1908, பிரிவு 17-ன் கீழ் பத்திரப் பதிவு அலுவலகத்தில் ஒத்தி பத்திரம் பதிவு செய்யப்படாமல் உள்ளது என்பதும், இந்திய அறக்கட்டளை சட்டம் 1882, பிரிவு 36-ன் கீழ் 21 வருட காலத்தித்திற்கு மேல் ஒத்தி விடப்படும் சொத்து குறித்து உரிய நீதிமன்ற அனுமதி பெறப்படாத நிலையில் திரு. ராஜதுரை மற்றும் மௌலானா அறக்கட்டளை ஆகியோர் செய்து கொண்ட ஒத்தி பத்திரம் மற்றும் மௌலானா அறக்கட்டளையின் ஒப்புதலின் அடிப்படையில் மட்டுமே சொத்து வரி பெயர் மாற்றம் செய்யப்பட்டதை அறிய முடிகிறது. எனவே மேற்காணும் பொருண்மைகளை கருத்திற்கொண்டு மௌலானா அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்திற்கு சொத்து வரியினை (வரி விதிப்பு எண்கள் 2455, 2456, 2480 மற்றும் 2481 மௌலானா அறக்கட்டளை பெயரிலிருந்து திரு. ராஜதுரை என்பவரின் பெயருக்கு மாற்றம் செய்யப்பட்டதை மேற்கண்ட சட்டங்களை

கருத்திற்கொண்டு மறு ஆய்வு செய்து உரிய ஆணைகள் பிறப்பிக்குமாறு மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி அதன் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 03-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. M. முகமது ரஹீஸ்,
1/7, பெரியார் நகர், இடையகாடு,
மதுக்கூர் - 614 903
தஞ்சாவூர் மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
மதுக்கூர் தேர்வுநிலை பேரூராட்சி
தஞ்சாவூர் மாவட்டம்.

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

4) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer).
(பெயரிட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
இராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை–600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்